# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2022 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*(2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, ஒற்றோபர் மாதம் 21 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 15.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2022 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்**

[2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.- ஓ. 11/2022

**2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்*

**1.** (1) இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் கூறப்படலாம்.

(2) இப்பிரிவு தவிர்ந்த சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக் கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் விரிவுப் பெயர், "சக்தி வழங்கல் குழுவுக்குக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவுக்குக்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*"சக்தி வழங்கல் குழுவானது" "குழு" என குறிப்பீடு செய்தல்*

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு எழுத்திலான சட்டத்திலும், முதன்மைச் சட்டவாக்கத்துடன் தொடர்பில், "சக்தி வழங்கல் குழு" என்னும் குறிப்பீடு ஒவ்வொன்றும், "3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழு" என்னும் குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தினால் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட, ஆக்கப்பட்ட, தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில், தொடர்பாடலில், படிவத்தில்

அல்லது வேறு ஆவணத்தில், "சக்தி வழங்கல் குழு" என்னும் குறிப்பீடு ஒவ்வொன்றும், "3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழு" என்னும் குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகிறது:-

*"இச்சட்டத்தின் கீழ் தத்துவகள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்று வதற்கு குழுவொன்றை நியமித்தல்*

3. (1) இப்பிரிவின் அடுத்துவரும் ஏற்பாடுகளுக் கமைய, இதனகத்துப் பின்னர் தரப்படும் தத்துவங் கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிக்கவும், புரியவும் மற்றும் நிறைவேற்றவுமென (இதனகத்துப் பின்னர், "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) குழுவானது பின்வருவோரைக் கொண்டி ருத்தல் வேண்டும்:-

(அ) பதவிவழி உறுப்பினர்கள்-

(i) பெற்றோலியம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செய லாளர், அவர் குழுவின் தவிசாளராதல் வேண்டும்;

(ii) திறைசேரியின் செயலாளர் அல்லது திறைசேரியின் பணிப் பாளர் தலைமையதிபதி பதவி வரிசைக்குக் குறையாத அவரது நியமத்தர்;

(iii) பொருளாதாரக் கொள்கை அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்ச ரின் அமைச்சுச் செயலாளர்;

(iv) முதலீட்டு ஊக்குவிப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ஆ) அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அல்லது முதன்மைப் பணிப்பாளர்;

(இ) பெற்றோலியத் தொழில் சட்டம் ஆகிய துறைகளில் திறமையை எய்தியுள்ள ஆட்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் ஒருவர், அமைச்சரவைக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியைவிட்டு விலகினாலன்றி அல்லது எடுத்துக்காட்டப்படும் காரணங்களுக்காக அத்தகைய உறுப்பினர் அமைச்சரவையால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, நியமனத் திகதியிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(4) குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன், குழுவானது, குழுவின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலான நடவடிக்கை முறையையும் ஒழுங்குபடுத்தலாம்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 3அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்ட வாக்கத்தின் 3அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட, குழுவானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்*

3அ. குழுவானது, (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படு தலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவிலுள்ள "வலு மற்றும் சக்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சர்", என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

" "அமைச்சர்" என்பது, அரசிலயமைப்புச் சட்டத்தின் 44 அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் இச்சட்டம் தொடர்பான விடயம் மற்றும் பணிகள் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள் படும்."; அத்துடன்

(2) "சக்தி வலு குழு" என்னும் சொல்லமைப்பின் வரை விலக்கணத்தை நீக்குவதன்மூலமும்.

*நிலைபெயர் கால ஏற்பாடுகள்*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின்கீழ் செல்லுபடியான முறையில் வழங்கப்பட்டதும் இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற திகதிக்கு அப்பால் நீடிக்கின்றதொரு காலப்பகுதிக்கு வலுவில் தொடர்ந்திருப்பதாக அதன்கண் குறிப்பிடப்பட்டதுமான ஒவ்வொரு உரிமமும், அவ்வாறு குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்கு வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உரிமம் பெற்ற ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அல்லது இச்சட்டத்தின் கீழும் அதன்கீழ் ஆக்கப்பட்ட வேறேதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின்கீழும் சட்டமுறையாக விதிக்கப்படக்கூடிய வேறேதேனும் நியதிகளினதும் நிபந்தனைகளினதும் ஏற்பாடுகளுக்கும் அமைந்தவராதலும் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**9**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*